# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இந்திய இலங்கை மன்ற திட்டங்களுக்காக தெரிவானவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு</u>

இந்திய இலங்கை மன்றத்தின் 39ஆவது பணிப்பாளர் சபையின் திட்டங்களுக்காக தெரிவானவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் 2024 ஜூன் 13ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கொடையாளர்கள், வர்த்தக நிறுவனங்கள், ஊடக நிறுவன பிரதிநிதிகள் மற்றும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

2. 39ஆவது பணிப்பாளர் சபை கூட்டமானது 2024 மார்ச் 19 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றதுடன் கலை, வரலாறு, கல்வி, பயிற்சி மற்றும் கலாசார அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற கருப்பொருளை உள்ளடக்கி இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 16 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவற்றில் 10 திட்டங்கள் கொழும்பு செயலகம் ஊடாக இலங்கையில் அமுல்படுத்தப்படும்.

3. இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் சிறு அளவிலான நிலைமாற்று திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதில் இந்திய இலங்கை மன்றத்தின் வகிபாகத்தை பாராட்டியிருந்தார். இரு நாடுகளுக்கும் இடையில் மக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் பரந்தளவிலான தன்மையினை இந்த மன்றம் எடுத்தியம்புவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

4. பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் ஊடாக இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக்கி, இரு நாடுகளினதும் மக்களிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக இந்திய இலங்கை மன்றமானது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த 25 ஆண்டுகளில் 160 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான 600 திட்டங்களுக்கு இம்மன்றம் ஆதரவினை வழங்கியிருந்ததுடன் இதில் 360 க்கும் அதிக திட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

***********

**கொழும்பு**
**14 ஜூன் 2024**